★ விலை ரூபா 1.25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 மாசி 16 ஐ. ஆ. 25 இதழ் 17

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-2-84

## குருநகர் முகாமில்
### குண்டு கண்டுபிடிப்பு!

(யாழ்ப்பாணம்)

குருநகர் அகதிகள் முகாமில் திடீர் சோதனையிட்ட பொலிசார் அங்கிருந்து குண்டு ஒன்றையும் கைக்குண்டு தயாரிப்பதற்கு பாவிப்பதாகக் கூறப்படும் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று மாலை பொலிசாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலைத் தொடர்ந்து யாழ். தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ரஞ்சித் டி சில்வா, இன்ஸ்பெக்டர்கள் களுவாராச்சி, கருணாரத்தின மற்றும் பொலிசார் கோஷ்டி குருநகர் அகதிகள் முகாமை சோதனையிட்டது.

ஒன்றரை அடி நீளமான நேரம் குறிவைத்து வெடி வைக்கும் குண்டு (டைம் பொம்) ஒன்றும் கைக்குண்டு தயாரிக்க பாவிக்கப்படுவதாக

(8-ம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் ஜனாதிபதி

(இ. சந்தசாமி)

பொலநறுவை தேசிய இளைஞர் முகாமில் கடைசி நாளான இன்றைய நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி பிரதமர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர்.

நேற்றைய நிகழ்ச்சிகளில் மன்னார் முகாம் இளைஞர்களுக்கு புத்தளம், கேகாலை, குருநாகல் முகாம்களில் உணவு வழங்கப்பட்டதுடன் இம் மூன்று முகாம்களும் இணைந்து சந்திப்பு நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (கு)

# இரண்டு ப.நோ.கூ. சங்கங்களில்
# ரூ. $2\frac{3}{4}$ லட்சம் கொள்ளை!

## க. பொ. த. (உ/த) பரீட்சை முடிவு

(கொழும்பு)

கடந்த செப்டம்பரில் நடைபெற்ற க. பொ. த (உயர்தர) பரீட்சை முடிவுகள்

(8-ம் பக்கம் பார்க்க)

## 4 துப்பாக்கி இளைஞர்களின் 'கைவரிசை'!

(புலோலி, கரவெட்டி நிருபர்கள்)

**மருத்தித்துறைத் தொகுதியிலுள்ள இரண்டு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களில் பத்துமணி நேரத்தில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவங்களில் சுமார் இரண்டேமுக்கால்லட்ச ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.**

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றில் நேற்று இடம்பெற்ற கொள்ளைச்சம்பவங்களில் நான்கு துப்பாக்கி இளைஞர்களே சம்பந்தப்பட்டுள்ளனர். என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கட்டைவேலி-நெல்லியடிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒருலட்சத்து நாற்பதினாயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது. இக்கொள்ளைசம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது.

ஆயுதந்தாங்கிய நான்கு இளைஞர்கள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவுச்சங்கத்தின் இரும்

(8ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி முனையில் லொறி கடத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஸ்டான்லி வீதி, பலாலி வீதி சந்திக்கருகில் நேற்று முன்தினமிரவு துப்பாக்கி முனையில் வெளியூர் லொறி ஒன்று கடத்தப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

## சமூக விரோதிகளுக்கு எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக விரோதக்குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக 'ஜெயா' என்று அழைக்கப்படும் பொன்னம்பலம் ஜெயபாலன் என்பவருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டிருப்பதாக நேற்று வெளியான துண்டுப்பிரசுரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தமிழீழ நீதிமன்றத் தீர்ப்பு' எனும் பெயரில் வெளியிடப்பட்ட இத்துண்டுப்பிரசுரத்தில் யோகபுரத்தைச்சேர்ந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## மட்டு.நகர் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் வேலைநிறுத்தம்!
### வைத்திய சேவை ஸ்தம்பிதம்!!

(இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் நேற்றுமாலை வைத்திய அதிகாரிகளும் உதவி வைத்தியர்களும் வேலைநிறுத்தத்தில் குதித்ததால் வைத்தியசேவை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது!

வெளிநோயாளர் பிரிவு உட்பட சகல பிரிவுகளும் நேற்று மாலை மூன்று மணி முதல் இயங்கவில்லை.

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தனது மனைவியுடன் டாக்டரின் அறைக்குள் பிரவேசித்ததை விரும்பாத டாக்டர் ஒருவர் அவரை வெளியே செல்லுமாறு கூறியதைத் தொடர்ந்து இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாம்.

இச்சம்பவம் குறித்து வைத்திய அத்தியட்சகரிடம் புகார் தெரிவித்த டாக்டர்கள் சம்பந்

(8ம் பக்கம் பார்க்க)

## 24 வங்கிக் கிளைகள் மூடப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் நேற்று 17 இலங்கை வங்கிக்கிளைகளும் 7 மக்கள் வங்கிக்கிளைகளும் மூடப்பட்டன.

இக்கிளைகளின் கடமைகள், அப்பகுதிகளில் பாதுகாப்பான இடங்களிலுள்ள வேறு கிளைகளுக்கும் மாவட்ட அலுவலகத்திற்கும் மாற்றப்பட்டுள்ளன.

இலங்கை வங்கிக் கிளைகளைப்

(8-ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் பெட்டி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தில் இரும்புப் பெட்டிகளைத் திறப்பதற்கான அனுமதி உத்தரவு பெற்ற பின்னரே வேலணை இலங்கை வங்கி கிளையில் கொள்ளையடிக்கப்பட்டு பின் மீட்கப்பட்ட இரு இரும்புப்பெட்டிகளும் திறக்கப்படும்.

இன்று யாழ். நீதிமன்றத்தில் இதற்கான அனுமதி உத்தரவு பெற விண்ணப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவுபெற்ற பின்னர் வங்கி அதிகாரிகள் முன்னிலையில் இரும்புப்பெட்டிகள் திறக்கப்படும்.

தற்போது யாழ் பொலிஸ் நிலையத்தில் இரு இரும்புபெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

## கடற்படையினரால் கைதான இந்தியமாலுமிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படையினரால் இலங்கை எல்லைக்குள் மீன் பிடித்ததாகத் தெரிவித்து கைதுசெய்யப்பட்ட இரு இந்திய மாலுமிகள் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் இவ்வழக்கு எடுக்கப்பட்டது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24-ம் தேதி இந்திய மாலுமிகளான எ. நைனார், எம் வேலு ஆகியோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் யாழ்ரோட்டறிக்கழக உறுப்பினரின் பொறுப்பில் இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆஜரானார் அரசதரப்பில் அரசசட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜரானார்

நேற்று இவ்வழக்கு எடுக்கப்பட்டபோது, அரச சட்டத்தரணி ஐ ஞானதாசன் சட்டமாஅதிபரின் ஆலோசனையின் படி வழக்கை தொடர்ந்து நடத்தவில்லை என்று தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து நீதிபதி சந்தேகநபர் இருவரையும் விடுதலைசெய்து அவர்களின் வள்ளங்களையும், பொருட்களையும், திருப்பிஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ)

## பனைத்தொழிலில் புதிய கண்டுபிடிப்பு!

(யாழ்ப்பாணம்)

'பனம்பால்' என்று சொல்லக்கூடிய பதநீரை போத்தலில் அடைக்கும் ஆராய்ச்சி இலங்கையிலே வெற்றிபெற்றுள்ளது என்று இந்திய பனைத்தொழில் நிபுணரும், பொது நல நாடுகளின் பனைவள ஆலோசகருமான திரு வே. சம்பந்தம் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

உலகில் உள்ள பனைவள நாடுகளில் இதுவரை நடத்தி வந்த பதநீர் போத்தலில் அடைக்கும் ஆராய்ச்சியில் இலங்கையிலேயே இது பூரண வெற்றியை பெற்றுள்ளதாக அவர் சொன்னார்.

பதநீரை இரண்டு வாரங்களுக்கு மேல் போத்தலில் பக்குவப்படுத்தி பருகுவதற்கு இதுவரை எந்தவித கண்டுபிடிப்பும் பலன்தராது வந்தது என்றும் புதிய இரசாயனப் பொருள் உதவியுடன் இந்த ஆராய்ச்சியில்தான் இறங்கியதாகவும், பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள கிராமத்தில் இந்த ஆராய்ச்சி

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் சோத்துப் பிடிச்சி ஒழுங்கையில் (சங்கானை வல்லை றோட்டுக்கு அண்மையில்) கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி முழுதாகவோ, பிரித்தோ விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: S செல்வராஜா (Proctor), 5, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1000

PL-4 டீபாக் லேத் மெஷின் இருவாரத்துக்குள் விற்பனைக்கு கிடைக்கும். உங்கள் தேவைக்கு பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1019

கோப்பாய் தெற்கு நாவலர் பாடசாலை ஒழுங்கையிலுள்ள 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி த. தர்மலிங்கம், யாழ். றோட், கோப்பாய்தெற்கு, கோப்பாய். 1037

யாழ்ப்பாணத்திலிருந்து ஆறு மைல் தூரத்தில் மானிப்பாய் மேற்கு பிரதான வீதியில் கட்டுடை உப தபால் கந்தோருக்கு அருகாமையில் வீட்டு அத்திபாரம், கிணறு மற்றும் பிரயோசனங்களுடன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: K K சிவசெங்கன், இற்றி மஹரன் சேவிஸ், 25, பீச் றோட், யாழ்ப்பாணம். 1038

## தேவை

மானிப்பாயில் இருந்து மூன்று மைல் சுற்றுடலில் உள்ள பிரபல வீடியோ சென்ரர் ஒன்றிற்கு மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை கடமையாற்றுவதற்கு இருபத்தைந்து வயதிற்கு மேற்பட்ட பெண் லிகிதர் தேவை. கணக்கியலில் அறிவுள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். 1-ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1039 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1039

ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று வியாபார விளம்பரம் செய்யவும், கணக்கிடல் செய்யவும் ஆண், பெண் இருபாலாரும் 18 வயதிலிருந்து 55 வயதிலானோர் தேவை. நல்ல சம்பளமும், எலவன்சும் பிரயாணச் சலுகைகளும் தரப்படும். எல்லா இடங்களிலிருந்தும் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1051 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1051

அனுபவமும், திறமையும் உள்ள அச்சுக்கோப்பாளர்கள் (Compositors) தேவை. தகுதிக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படும். ஐம்பது வயதுக்கு மேற்பட்டோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். அத்துடன் அச்சுக்கோர்க்கும் பயிலுனர்களாக பயிற்சி பெற பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விளம்பர இல: 997, மே. பா. ஈழநாடு, சிவன்கோவில் மேற்கு வீதி, யாழ்ப்பாணம். 997

## வாடகைக்கு

வீடியோ டெக் புதிய திரைப்பட வீடியோ கசற் என்பன வாடகைக்கு கொடுக்கப்படும். Stanly Centre கனகரத்தினம் கட்டிடம் (றெயில்வே கடவை அருகாமை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 988

## கல்வி

வயரிங், மோட்டார் மெக்கானிசம், காலை வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறுகிறது புதிய மாணவர்கள் 2-8-84ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க: பொறியியல் கல்வி நிலையம் Engineering Education Centre புதிய மேல் மாடிக் கட்டிடம், சம்பந்தன் வைத்தியசாலைப் பக்கம். சாந்தி சினிமா அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். விரிவுரையாளர் S C. இம்மானுவேல், Bsc-Cey Electrical and Automobile Enigneer. 1050

## வகுப்புகள்

Spoken English with Grammer and Literature மொழி பெயர்த்தல் (தமிழ்-ஆங்கிலம் ஆங்கிலப் பத்திரிகை வாசித்தல் இவ்வகுப்புகள் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் கற்கவிருக்கும் மாணவர்களுக்கும் மிகுந்த பலன் அளிக்கும். சனி, ஞாயிறு தினங்களில் பி. ப. 3—4-30 வரை. புதன்கிழமை பி. ப. 4 — 5 மணி வரை. விரும்பும் மாணவர்கள் உடன் சேரவும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி தியேட்டர் அருகாமை) யாழ்ப்பாணம். 1047

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 80/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 502

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## நாவலர் சனசமூக நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தின் முப்பத்தி நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. இ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சொ. குணசிங்கம், உப தலைவர்: திரு கி. இராசா, செயலாளர்: திரு கு. ரவீந்திரன், உப செயலாளர்: திரு இ நவரத்தினராஜா, பொருளாளர்: திரு பூ. புஷ்பராஜன், நூலகர்கள்: திரு. சி. ரூபராஜன், திரு. இ யோகநாதன், நாடகமன்றப்பொறுப்பாளர்: திரு கி செல்வச்சந்திரன், விளையாட்டுக்குழுத் தலைவர்: திரு ச. சந்திரன், மாணவர் மன்றத் தலைவர்: திரு. வே. சிகவலிங்கம் மற்றும்ஆறுபேர் கொண்ட இணைச்சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பதிவாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி குமாரசுவாமி பதிவாளர் நாயகத்தால் கொக்குவில், கோண்டாவில் பிரிவு பிறப்பு இறப்பு, விவாகப் பதிவாளராகவும், யாழ்ப்பாணம் (பொது) விவாகப் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான இவர் பதுளை மாவட்டத்திலுள்ள ஸ்பிரிங்வலி நாவத்த தமிழ்க் கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர்.

இவர் அங்கு கடமையாற்றிய காலத்திலே மலைநாட்டு மாணவர்களின் கல்விவிருத்திக்காக அருஞ்சேவையாற்றினார்.

இவர் பல சமூகசேவைகளிலும் ஈடுபாடுடையவராகத் திகழ்ந்துவருகிறார்.

# இலங்கை வங்கி

## விசேட அறிவித்தல்

நெல்லியடி வேலணை ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது வங்கிக் கிளைகள் 27-02-1984 திங்கட்கிழமை தொடக்கம் கீழே அவ்வவற்றுக்கு எதிரில் குறிக்கப்பட்டுள்ள எமது கிளைக் கட்டிடங்களில் இயங்குமென இத்தால் எமது வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

1. நெல்லியடிக்கிளை – மருத்தித்துறைக் கிளை
2. வேலணைக் கிளை – இரண்டாம் யாழ்ப்பாணக் கிளை (ஸ்ரான்லி வீதி)

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இம்மாற்றங்களை நாம் தற்காலிகமாக மேற்கொள்வதால் சகல வாடிக்கையாளர்களும் அவ்விடங்களில் தங்கள் கொடுக்கல்வாங்கல்களை செய்துகொள்ளுமாறு தயவாக வேண்டப்படுகின்றனர்.

எமது வாடிக்கையாளர்கட்கும் பொதுமக்களுக்கும் இதனால் ஏற்படும் வசதியீனங்களுக்காக வருந்துகிறோம்.

மாவட்ட முகாமையாளர்
யாழ்ப்பாண மாவட்டம்
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.

1025

## வட்டுக்கோட்டைத் தொகுதி மாணவர்க்கோர் நற்செய்தி!!

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நேரிவே தொண்டேயம் லயன்ஸ் கழகத்துடன் நடாத்தும் வட்டு — தொண்டேயம் தொழிற் பயிற்சி நிலையத்தில்

**Computer Programming**

4-3-84 ஞாயிற்றுக்கிழமை
சித்தன்கேணியில் வகுப்பு ஆரம்பம்.
[6 மாதம்] கட்டணம் ரூபா 1200/- மட்டுமே.
விபரம் சித்தன்கேணி அலுவலகத்தில் நேரில்/தபாலில் பெற்றுக்கொள்ளலாம். 1045

## எங்கள் இன்றைய வெளியீடு

மகாசிவராத்திரியை முன்னிட்டு சிவபக்தர்களுக்கு பெருமையுடன் சமர்ப்பிக்கின்றோம்.

**"யசோதா கிருஷ்ணா"**
(PYRAMID ORIGINAL)

உங்கள் பிரதிகளை உடன் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**குணம் வீடியோ சென்டர்**
42, மணிக்கூட்டு வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

1044

## உங்கள் தேவைக்கு பணம் வேண்டுமா?

உங்கள் நகைகள், வாகனங்களைப் பொறுப்பாக வைத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் இவ்வேளையில் பண நெருக்கடி நேரிடும்போது எம்மைச் சந்தித்து வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். மாதா மாதம் குறிப்பிடப்பட்ட பணத்தைச் செலுத்தி குறித்த தவணையில் மீளப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**
249, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23680

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி சிவபாக்கியம் ஞானப்பிரகாசம்



தோற்றம்: 16-3-1926
மறைவு: 11-3-1983

உமது நினைவு என்றும் எம் அனைவர் உள்ளத்திலும் அணையாத தீபமாய் பிரகாசிக்கின்றது. உமது மாசற்ற ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.
(ஜெயா அச்சக உரிமையாளர்)
அளவெட்டி வடக்கு.

993

## நன்றி நவிலல்

02-02-1984 இல் இறைவனடி அடைந்த எமது அன்புத் தாயார் திருமதி மீனாட்சி முத்தையா அவர்களின் மறைவை ஒட்டி, அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் வைத்தும், வேறு பல உதவிகளைப் புரிந்தும் எமக்கு ஆறுதலளித்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

திரு. திருமதி இளையதம்பி,
திரு. திருமதி சினித்தம்பி
திரு திருமதி வாமதேவன்
திரு. மு. மகாரட்ணம் (பிரதிப் பொது முகாமையாளர் இலங்கை மின்சாரசபை கொழும்பு)

திரு. மு, பஞ்சலிங்கம் (மேலதிக அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்)
திருமதி பஞ்சலிங்கம்
திரு. மு. பரந்தாமன் (உரிமையாளர் MUTHIAH and SONS 95, கொழும்பு வீதி, கண்டி.)
திருமதி பரந்தாமன்
திரு மு யோகேஸ்வரன் (பிரதம கணக்காளர்- AGRO MARINE)
திருமதி யோகேஸ்வரன்

(1049)

# லெபனுன் மலைப்பகுதிகள் மீது அமெரிக்கா பீரங்கித் தாக்குதல்!

பெய்ரூட், பெப். 27

லெபனுன் கடற் பிராந்தியத்தில் நிலை கொண்டிருக்கும் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள், லெபனுன் மலைப் பகுதிகள் மீது தாக்குதலை ஆரம்பித்துள்ளன!

லெபனுனில் நிலைகொண்டிருந்த அமெரிக்காவின் கடைசிப் போர்வீரர்கள் நேற்றுமுன்தினம் அமெரிக்கக்கப்பல்களுக்கு அனுப்பப்பட்ட சிறிது நேரத்தில் அமெரிக்கா இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

ட்ரூஸ், ஷியாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பெய்ரூட்டின் முக்கிய பகுதிகளிலும் அமெரிக்கா தமது கப்பல்களிலிருந்து பீரங்கித் தாக்குதலை நடத்தியுள்ளது.

முஸ்லிம்தீவிரவாதிகள்தமது படையினர்மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே அமெரிக்கா தாக்குதலை நடத்தியதாக தெரிகிறது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் லெபனுனின் நிலைமை மோசமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை யுத்தநிறுத்தம் ஏற்பட்ட பெய்ரூட்டின் முக்கிய பகுதிகளில் முஸ்லிம்தீவிரவாதிகளுக்கும் லெபனுனிய இராணுவத்தினருக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றதாகவும், இதில் சமாதானப் படையிலுள்ள ஒரு பிரான்சிய வீரர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. (சூ)

# பசுபிக் பிராந்தியத்தில் சோவியத் இராணுவபலம் அதிகரிப்பு!

வெலிங்டன், பெப். 27

பசுபிச்சமுத்திரப் பிராந்தியத்தில் சோவியத் யூனியனின் இராணுவபலம் அதிகரித்து வருவதாக நியூஸிலாந்து குற்றஞ்சாட்டியுள்ளது.

நியூஸிலாந்தின் வெளியுறவு அமைச்சர் டேவிட் தொம்சன் வெளியிட்டுள்ள அறிக்கையில்; ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் சோவியத் யூனியனின் மற்றுமொரு விமானம்தாங்கிக் கப்பல் நுழைந்துள்ளது இது ஏற்கனவே அங்கு நிலைகொண்டிருக்கும் சோவியத்தின் நான்கு பெரிய விமானம் தாங்கிக் கப்பல்களுடன் சேர்ந்துகொள்ள விருக்கிறது இவை மலாக்கா நீரிணை, ஆசிய-பசுபிக்பிராந்தியத்தில் நிரந்தரமாகவே நிறுத்தப்பட்டிருக்கின்றன. சோவியத்தின் இந்த நடவடிக்கையால் நியூஸிலாந்து மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிறிய நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனுல் நியுஸிலாந்து தமது பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

## தென்னுபிரிக்காவில் பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம்

கேப்டவுண், பெப். 27

தென்னுபிரிக்கக் குடியரசில் பல் தேசிய நிறுவனங்களது முதலீடுகள் 2500கோடி டாலர்களை எட்டிவிட்டன. அத்துடன் இதுமேலும் அதிகரித்து வருகிறது.

பல்தேசிய நிறுவன முதலீட்டாளர்களில் பிரிட்டிஷாரே பிரதான இடத்தை வகிக்கின்றனர் பிரிட்டிஷ் பல் தேசிய நிறுவனங்கள் தென்னுபிரிக்காவில் 40 சதவீதமான முதலீட்டைக் கொண்டிருக்கின்றன. அமெரிக்கர்கள் 20 சதவீதமும், ஜேர்மனி 10 சதவீதமும் கொண்டுள்ளன.

ஏறத்தாள 2 200 மேற்குலக நிறுவனங்கள் தென்னுபிரிக்காவில் இயங்குகின்றன இவை அங்கு தொழிலகங்களையும் மற்றும் நிலையங்களையும் கொண்டுள்ளன இவற்றுள் 700 பிரிட்டிஷ் நிறுவனங்கள், 540 அமெரிக்க நிறுவனங்கள், 465 மேற்கு ஜெர்மனி, 120 பிரெஞ்சு நிறுவனங்கள் ஆகியவை அடங்கும்.

தென்னுபிரிக்காவின் பிரதான வர்த்தகப் பங்காளிகளாக அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஜப்பான், பிரான்ஸ் ஆகியன விளங்குவதன் மூலம் இந்நாடுகள், தென்னுபிரிக்க இனவாத ஆட்சிக்கு எதிராக ஐ நா. கொண்டுவந்த தீர்மானங்களைச்சீர்குலைக்கின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருவதுவும் தெரிந்ததே.

தென்னுபிரிக்காவுக்கு ஆயுத விநியோகத்தைப் பாதுகாப்புச் சபை தடை செய்திருந்தும் மேற்படி நாடுகள் இந்த இனவாத ஆட்சிக்கு ஆயுத விநியோகம் செய்வதுடன், ஆபிரிக்காவிலேயே பலமிக்க இராணுவ அரணுக அதனை மாற்றிவருகின்றன நேட்டோ நாடுகளினதும், இஸ்ரேலினதும் உதவியுடன் யுத்தத் தொழில்துறை இங்குவளர்ச்சி பெற்றுள்ளது. அத்துடன் மேற்குலக நாடுகள் சில மூலமாகவும் மறைமுகமாக தென்னுபிரிக்காவுக்கு ஆயுத விநியோகத்தைச் செய்துவருகின்றன. (சூ)

அகாலிதள் ஆர்ப்பாட்டம்:

## புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்!

புதுடில்லி, பெப். 27

புதுடில்லியில் அகாலிதள் கட்சியினர் மேற்கொள்ளவிருக்கும் ஆர்ப்பாட்டப்பேரணியை அடுத்து இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அகாலிதள் கட்சியினர் புதுடில்லியில் இந்திய அரசியலமைப்பின் 25வது பிரிவினை எரித்து ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளனர்.

இதனிடையே அகாலிதள் கட்சியினரின் இந்த முயற்சியை கைவிடுமாறு சீக்கியமத முக்கிய தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முக்கிய அரச அரசு சார்பற்ற ஸ்தாபனங்களும் இந்த முயற்சியைக் கைவிடுமாறு கேட்டுள்ளன.

புதுடில்லியில் மேற்கொள்ளவிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பிரதமர் திருமதி காந்தி தமது பொறுப்பில் ஏற்றுள்ளார். (சூ)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை

# கணக்காளர் பிரிவு பன்முகப்படுத்தப்பட்டது!

(கரவெட்டி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் இதுவரைகாலமும் வவுனியாவிலும் கோண்டாவிலிலும் இயங்கிவந்த வட்டாரக் கணக்காளர் காரியாலயம் மேலும் பன்முகப்படுத்தப்பட்டு ஏனையசாலைகளுக்கும் மாற்றப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு சி. கனகரத்தினம் எடுத்த இந்த நடவடிக்கையை அடுத்து வரவு செலவு கொடுப்பனவுகணக்குகள் துரிதமாகவும் சுலபமாகவும் செய்யக்கூடியதாகவும் அறியக்கூடியதாகவும் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பன்முக கணக்குப் பிரிவின் கீழ் யாழ். பருத்தித்துறை, காரைநகர் சாலை முகாமையாளர்களின் நிர்வாகத்தில் ஒவ்வொரு பிரிவாக இவை இயங்கும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு கணக்கு விவகாரங்களை கிளிநொச்சி சாலையில் உள்ள பிரிவு கண்காணிக்கும்.

வவுனியா சாலையில் உள்ள கணக்குப் பிரிவு வவுனியா, மன்னூர் சாலைகள் சம்பந்தப்பட்ட கணக்குகளை மேற்கொள்ளும். இதற்கென பின்வரும் கணக்காளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். எஸ். திலகேந்திரம்; பருத்தித்துறை- கே. திக்கைநாதன்; காரைநகர்- ஆர். அருணுசலம்; வவனியா- எஸ்.சபாரத்தினம்; கிளிநொச்சி- பி. கணேசபிள்ளை


யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ் நகரிலேயே பதிவு செய்துகொள்ள

நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ்(பிறைவேற்) லிமிட்.

பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, அமெரிக்கா

செல்வதற்கான சகல ஏற்பாடுகள் மற்றும் பயணச்சீட்டுக்களை

மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL
SERVICES (PTE) LTD,
STAGE II, MODEL MARKET,
No 5 1st FLOOR.
BUS STAND CENTRE ROAD,
JAFFNA
Phone: 22065, 22040


திருநெல்வேலியில்

## சென்ஜோன் அம்புலன்ஸ் பயிற்சி வகுப்பு நாளை

[மானிப்பாய்]

சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவி வகுப்பு நாளைபுதன் காலை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது

டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி, ஏ சிவசுப்பிரமணியம், என் பி பாக்கியராஜா, திரு சதீஸ்வரன், என் நவரட்ணராஜா ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்துவர்கள்.

## அசாமில் 80 பேர் சரண்!

(ஹொகாட்டி)

அசாமில் 80 தீவிரவாதிகள் சரண் அடைந்துள்ளதாக மாநில முதலமைச்சர் தெரிவித்தார்

இவர்கள் தமது ஆயுதங்கள் சகிதம் சரண் அடைந்திருப்பதாகவும், இதனுல் அசாம் மாநிலத்தில் புதிய திருப்பமொன்று ஏற்படலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார் (சூ)

## ரூ 4 லட்சம் வருமானம்

(கரவெட்டி)

வடபிராந்திய போக்குவரத்து சபையால் அண்மையில் நடத்தப்பட்ட பழைய பஸ்கள் கழிவுப்-பொருட்கள் ஏலவிற்பனையின் மூலம் நாலு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் ரூபாய் வருமானத்தை சபை ஈட்டியுள்ளது.

## அரிசி விலை அதிகரிப்பு

[மாவிட்டபுரம்]

வலி. வடக்குப் பகுதியில் அரிசிவிலை அதிகரிப்பினுல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

சமீபத்தில் வெள்ளம் காரணமாக நெற்பயிர்கள் அழிந்தமையால் போதியளவு நெல்லைப் பெறமுடியாமலுள்ளது. இதன் காரணமாகவே அரிசியின் விலை நாளுக்குநாள் ஏறி வருகிறது.

கிலோ 7 ரூபாவுக்குள் விற்கப்பட்ட குத்தரிசி தற்போது 10 ரூபாவாக அதிகரித்துள்ளது

சில வர்த்தக நிலையங்களில் ஓரளவு குறைந்த விலையில் அரிசி கிடைக்கின்றபோதும், அது கலப்படம் செய்யப்பட்டுப் பாவனைக்குதவாத நிலையிலுள்ளது. (வெ)

## மாணவருக்கு பாராட்டுவிழா

(கரவெட்டி)

கடந்த வருட ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயத்தைச் சேர்ந்த 11 மாணவர்களுக்கு பாராட்டு விழா ஒன்றை இப்பகுதி மக்கள் அடுத்தமாதம் 7ம் திகதி நடத்தவுள்ளனர்.

வித்தியாலய அதிபர் திரு. மன்னவன் சுந்தப்பு தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்விப்பணிப்பாளர் திரு எம். சியாம் பிள்ளை, சிறப்பு விருந்தினராக முன்னுள் நல்லூர் எம் பி. திரு மு சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இப்பாடசாலை மாணவன் செல்வன் அ ஆரூரன் மேற்படி பரீட்சையில் அகில இலங்கையில் முதல் இடத்தையும், செல்வன் அ. கணநாதன் மூன்றும் இடத்தையும் பெற்றுச் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### மணிவாக்கு

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்

—குறள்

# நமது நோக்கு

## வெள்ள அகதிகள்

இலங்கையில் ஏற்பட்ட வெள்ள அழிவும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருக்கிறது; நிவாரண உதவிகள் வரத்தொடங்கி யிருக்கின்றன. நாட்டுக்குப் பொதுவாக சர்வதேச ஆதரவிருப்பது தெரிந்ததே!

இவ்வித உதவி போதா தென்பது அரகின் கணிப் பாகையால், வெளிநாட்டு முகவர் நிலையங்களின் உத விகளைப் பெற அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக கிராமிய அபிவிருத்தியமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா தெரிவித்திருக்கிறார்; இது துரிதப்படுத்தவேண்டியதை நாம் வற்புறுத்துகிறோம்.

விவசாயிகளுக்கு தேவைப் படும் நிவாரணம் எவ்வகையிலும் சாதாரணமல்ல வென்பதை புள்ளி விபரங்கள் எடுத்துக்கூறும். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ நாற்பது லட்சம் புசல்நெல் நாசமடைந்திருக்கிறது. வடக்கிலும் கிழக்கிலும் வடமத்திய மாகாணத்திலும் நிகழ்ந்த அழிவுகள் ஒரு பிராந்தியத்தின் அழிவெனக் கொள்ளலாகாது தமிழ் பிரதேசங்கள் மட்டுமல்ல.

இவற்றை நன்கு படித்து உரிய முறையில் விளக்கம் கொண்டால் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையென்பதில் எவ்வித ஐயமுமில்லை

அழிவு எதுவென்றாலும்-மனிதனாலோ இயற்கையாலோ-அழிவே! தேசிய ரீதியில் அது பாதிக்குமளவு பெருத்துவிட்டால் அதற்கு பரிகாரம் காணும்பொறுப்பு மத்திய அரசுக்கு உரித்தானது; மாநிலஅரசு இங்கில்லையென்றாலும் கொழும்புத் தலைமைப்பீடத்தையே நாம் குறிக்கின்றோம்.

இன்று கிழக்கிலும் வடக்கிலும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் அகதிகளாயிருக்கும் நிலைமையில் இவர்களுக்கு உதவும் கரங்கள். அரச அதிபர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கை மட்டும் போதுமானதல்ல.

நாம் முன்னரே வற்புறுத்தியது போல, ஒரு பரந்த பாகுபாடற்ற மதிப்பீடு மிகமிக அவசியம். அரசின் நேரடிப் பரிசோதனை நடவாதது பெரும் ஏமாற்றம்.

மாகாண ஆட்சி அதிகாரிகள் மிகப்பொறுப்புடன் இக் கடமையில் பங்கு கொண்டுள்ளனர்; பாதிப்புற்ற மக்களின் கண்ணீரை நேரில் கண்டனர்; அவர்கள் தயாரித்த, இன்றும் தயாரிக்கும் விபரங்கள் மனிதாபிமானம் கலந்த, அனுதாபம் ஊறிய புள்ளிகள்; அதுபற்றி சந்தேகம்எதுவும் இல்லை.

இருப்பினும் வடக்கும் கிழக்கும் இன்று அரசியல் ரீதியில் சர்ச்சை விளைக்கும் விவகாரங்களில் சிக்கியுள்ளன. இவற்றை ஆராய்ந்து தக்க தீர்வுகாணும் பணியில் அரசு இறங்கியிருக்கும் தருணத்தில் இதனைப் பொருட்படுத்தாது தனது அதிகாரத்தை வெளிப்படுத்தி யதே இயற்கையின் தாக்கம்.

கிழக்கிலும், குறிப்பாக வடக்கிலும் இது அடிக்கு மேல் அடியெனலாம். கலவரம், வெள்ளம், வங்கிக் கொள்ளைகள், மற்றைய கொள்ளைகள் பொலிசார்—இளைஞர் போராட்டம் போன்ற நெருக்கடிகள் யாவும் பொது மக்கள் வாழ்வை நாளுக்கு நாள் பாழ்படுத்திவிடுகிறன.

துன்பங்கள் இணைந்து கொண்டால் அவற்றை ஒன்றாக்கி, தவறான வழியில் பழி சுமத்தி சிக்கலை மோசப்படுத்தி ஈற்றில் நிவாரணமென்ற பேரில் நிலைமையை மோசமாக்கிவிடுவது இயற்கை; ஆட்சியில் இடம் பெறும் திறமையற்றசெயல்கள் இவை.

எனவே அரசியல் விடயம் வேறு; வெள்ள நிவாரணம் வேறு இரண்டும் தேசிய பிரச்சினைகள். இரண்டையும் வேறுபடுத்தி, ஒன்றில் உண்டாகும் வெறுப்பு மற்றதில் தொற்றாது நடுநிலைமை நின்று நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதே உயர்ந்த அரசியல் ஞானம்; தான் செத்துதான் அழும் நிலை எவ்வகையிலும் நாட்டின் மதிப்பை அதிகரிக்காது.

ஒற்றை ஆட்சியின் தகுந்த அரசியல் முடிவுகாண அரசு முயல்கிறது இவ்வேளையில் மக்களில் ஒரு பகுதியினர் தாக்கப்பட்டு உயிரிழந்த கட்டத்திலும், வெள்ளத்தால் உடைமை இழந்து உண்ண உணவுக்கு கதியற்றுக் கதறும் வேளையிலும் பகிரங்கமாக அனுதாபம் தெரிவித்து மக்களுக்கு உற்சாகம் அளிக்கும் அவசிய பணியில் தீவிரப்படாதமை வேதனைக்குரியது.

தமிழ்ப் பிரதேசங்கள், பரதேசமாகாமல், அவற்றிற்குரிய புனரமைப்புமிகப் பொறுப்பான முறையில் நடைபெற்றால், அரசியல் கொந்தளிப்பு என்னவானாலும், இலங்கையெனும் 'சுவர்க்கம்' மீட்சியடைந்தமை பாட இன்னொரு 'மில்டன்' இங்கு உதயமாவான்.

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு மருத்துவப்பேராசிரியர் என். சரவணபவானந்தன் 'குற்றவியலுக்கு உதவும் சட்டத்துறை மருத்துவம்' என்னும் விடயம் பற்றி சிறப்புரையாற்றவுள்ளார்.

### அபிவிருத்திசபை அமைக்க முயற்சி

(சாவகச்சேரி)

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையின் வளர்ச்சி கருதி ஓர் அபிவிருத்திசபையை உருவாக்குவதற்கான முயற்சியில் வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் திருமதி சத்தியநாதன் ஈடுபட்டுள்ளார்.

# திருக்கேதீச்சரத்தில் நாளை சிவராத்திரி

## விசேட பூசை, அபிடேகங்கள் சிறப்பாக நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நாளை புதன்கிழமை மகாசிவராத்திரி தினம் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி விசேட பூசைகளும், அபிடேகங்களும், நாதஸ்வரக்கச்சேரி, சமயச் சொற்பொழிவுகளும், திருமுறைஓதலும் இடம்பெறவுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் புதன்கிழமை மாலை 6-30 மணி தொடக்கம் இரவு 8-00 மணிவரையும் இரவு 9-30 மணி தொடக்கம் மறுநாட்காலை 6-30 மணிவரையும் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரடி அஞ்சல்செய்யவுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் புதன்கிழமை காலை 5-00 மணிக்கு திருவனந்தல், 7-35 மணிக்கு காலை சந்திப்பூசை, 11-00 மணிக்கு உச்சிக்காலப் பூசையும், பிற்பகல் 5-00 மணிக்கு சாயங்காலப் பூசை, இரவு 8-00 மணிக்கு முதலாம்சாமப்பூசை, 10-30மணிக்கு இரண்டாம் சாமப்பூசை, நள்ளிரவு 12-15 மணிக்கு மூன்றாம் சாமப்பூசை, 1ம் திகதி அதிகாலை 3-00 மணிக்கு நான்காம்சாமப்பூசையும், 5-00 மணிக்கு காலை சந்திப் பூசையும், 5-30மணிக்குவசந்த மண்டப அலங்காரப்பூசையும், 6-00மணிக்கு சுவாமி தீர்த்தத்திற்கு எழுந்தருளல், 7-00 மணிக்கு பாலாவியில் தீர்த்த மாடல் ஆகியன இடம்பெறவுள்ளன. (வெ)

### சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சரவணை கொட்டாங்காடு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவ சுவாமி கோவலில் மகாசிவராத்திரி விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி சமய அறிவுப் போட்டி, கூட்டுப்பிரார்த்தனை, பட்டிமன்றம், வில்லிசை, கதாப்பிரசங்கம், மேளக்கச்சேரி ஆகியன இடம் பெறவுள்ளன. (வெ)

●

(யாழ்ப்பாணம்)

கைதடிவடக்கு கப்பிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நாளை புதன்கிழமை மகாசிவராத்திரி உற்சவம் நடைபெறவிருக்கிறது.

வில்லிசை, கதாப்பிரசங்கம், நாதஸ்வரக்கச்சேரிகளைத் தொடர்ந்து விசேட ஸ்நாபனாபிஷேக பூசை, திருவிழா நடைபெறும். (வ)

# பூநகரி வழியாக போக்குவரத்து ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பூநகரி, சங்குப்பிட்டி, மன்னார் வீதிகளில் மூன்று அடி உயரத்திற்கு நின்ற வெள்ள நீர் இயந்திரம் மூலம் வெளியேற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த சனிக்கிழமை முதல் பஸ்சேவை திருக்கேதீஸ்வரம் வரைக்கும் நடைபெற ஆரம்பித்துள்ளது. மன்னார், யாழ். டிப்போக்கள் பஸ் சேவையை நடத்தி வருகின்றன.

கடும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பூநகரி பாதை வழியாக திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி விழாவுக்குச் செல்லும் யாத்திரிகர்களின் வசதி கருதி பூநகரி பெருந்தெருக்கள் திணைக்களம் தற்காலிக ஏற்பாடுகளை மேற்கொண்டு போக்குவரத்து சேவையை வழமை நிலைக்கு ஏற்படுத்தியுள்ளது.

பூநகரி பெருந்தெருக்கள் திணைக்கள நிறைவேற்றும் பொறியியலாளர் திரு. தவசிலிங்கமும், தொழில் நுட்ப அதிகாரி திரு பீ. வாமதேவனும் இந்த வேலையை கண்காணித்தனர்.

திருக்கேதீஸ்வர சிவராத்திரி யாத்திரிகர்களுக்கு தாக சாந்தி, அன்னதானம் வழங்கல் போன்ற நடவடிக்கைகளை வழமை போன்று பூநகரி ப. நோ. கூ. சங்கம் இம்முறையும் மேற்கொண்டுள்ளது.

பூநகரி தொண்டர் ஸ்தாபனத் தலைவர் திரு. எஸ். சிவநாதன் தண்ணீர் பந்தல் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.


செல்வபோகபுரம் சித்திவிநாயகர் கோவிலிலும் அன்னதானம் இடம்பெறவுள்ளது. இதற்கு யாழ் வர்த்தகர்களும் பொது மக்களும் உதவி புரிந்துள்ளனர்.

திருக்கேதீஸ்வர சிவராத்திரி யாத்திரிகர்களின் வசதி கருதி கேரதீவு-சங்குப்பிட்டி மகாதேவா தாமபோதியில் மேலதிகமாக நான்கு இயந்திர வள்ளங்களை ப. நோ. கூட்டுறவுச் சங்கம் சேவையில் அமர்த்தியுள்ளது.

வீதிகளில் வாகனங்கள் போய்கொண்டிருக்கும் போது புதைந்தால் அவற்றிற்கு உதவி புரியவேண்டுமென்பதற்காக பெருந்தெருக்கள் திணைக்களம் இரு டிராக்டர் வண்டிகளை தயாரான நிலையில் வைத்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

# கடையிற்சுவாமி சமாதிக்கோவில் திருப்பணி



நீர்வாவியடியில் சமாதியடைந்த கடையிற் சுவாமிகள் யோகசுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகளின் குருவானவர். அட்டமா சித்திகளும் கைவரப்பெற்ற இவர் யாழ்ப்பாணத்திலும் மண்டைதீவிலும் பல அரும்பெரும் சித்து விளையாட்டுக்கள் நிகழ்த்தியதாகக் கேட்டுள்ளோம்; படித்துள்ளோம். ஆனால் நேரில் கண்டதில்லை.

கடந்த ஒருவருட காலமாக அவர் நிகழ்த்திவரும் சித்து நாம் நேரில் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. சிலமடைந்த கோவிலைப் புதுப்பித்து பண்டைய சீரும் சிறப்புமுற விளங்கச்செய்யவேண்டும் என்ற ஆர்வம் வாலிப வட்டத்தினரிடையே எழுந்தது. அல்லது திருவருள் எழச்செய்தது என்றே கூறலாம். பலவித தடங்கல்களையும் தாண்டி கடந்த மே மாதம் நிர்வாக சபையொன்றை அமைத்தனர். கையிலோ பணமில்லை! ஆனால் ஆசையோ விடவில்லை மனம் படைத்த தனம் படைத்தவர்கள் தாமே வலிய வந்து தம் மாலியன்ற பொருளுதவி செய்து கடையவன் அருள் பெற்றனர். ஆமை வேகத்தில் ஆரம்பித்த திருப்பணி இப்பொழுது அசுர வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது. நாளை புதன்கிழமை மகாசிவராத்திரியன்று திருப்பணிப் பூர்த்திவிழா எடுப்பதென கங்கணம் கட்டிக்கொண்டு இரவு பகலாக ஊண் உறக்கம் பாராது கருமமே கண்ணாய் உழைக்கின்றனர்.

## பி.எஸ். செட்டியார்

பார்ப்போர் எல்லாம் ''சுமார் நான்கு இலட்சம் ரூபாய் செலவாகியிருக்குமா?'' என்று கேட்கின்றனர். உண்மையில் பொருளும் பொருட்களுமாக சேர்ந்த தொகை சற்று ஏறக்குறைய ஒரு லட்சமேயிருக்கும். இதுவே கடையிற்சுவாமிகளின் இன்றைய கண்கண்ட சித்து.

கடையிற் சுவாமிகளைப்பற்றி அறியாதோர் சிலரின் நன்மைக்காக இரத்தினச் சுருக்கமாக அன்னாரின் சரிதையை கீழே தருகிறேன்.

''சுவாமிகளின் திருவுருவம் கவர்ச்சிகரமாயும் உண்மையுள்ளமுடையார்க்குப் பயபக்தி விளைப்பதாயுமிருக்கும். அளவான உயரம்; பூரித்த திருமேனி; முழந்தாவரை நீண்ட திருக்கரங்கள்; பஞ்சவர்ணக் கிளியின் நீண்டகூற திருமூக்கு; விரிந்தசையும் குஞ்சி; எலுமிச்சம்பழ வர்ணம்; இவை அவர் திருவுருவப் பொலிவாகும். அரையில் வேஷ்டி; தோளிற்சால்வை-இவரின் திருவுடையாகும். பெரும்பாலும் கருநிறமாகவே தோன்றும். வெண்சீலை வேய்ந்த குடை அவர் வசம் இருக்கும். உலவும் போதெல்லாம் அதனை கக்ஷத்தில் வைத்துக்கொள்வார். நெற்றியிலே திலகம் ஒன்று பளபளக்கும். குழந்தைவேற் சுவாமிகள் அழகாக வர்ணிக்கிறார்.

''பெரியகடை நாதன்
பித்தன் திருக்கோலம்
கரிய வர்ணச் சீலை கருந்
தோலான சால்வை
துரியா தீதப் பொட்டு
துலங்க நடைமெட்டுச்
சரியா மறிந்தேத்தித்
தலைத்தாட்படுவீரே!''

அறம், பொருள், இன்பம்,

(5-ம் பக்கம் பார்க்க)

'பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர் இடமாற்ற சிபார்சு:

# இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் பலத்த ஆட்சேபம்!

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் விண்ணப்பங்களை பொதுநிர்வாக அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டதை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பலத்த ஆட்சேபம் செய்தார்.

கல்விப்பணிப்பாளர்குழு முதலில் சிபார்சு செய்த அறிக்கை முழுஅளவில் திருப்தியளிக்கா விட்டாலும், பெருமளவில் நன்மையளித்திருந்ததாகவும், அவர் தெரிவித்தார்.

திரு. த. மகாசிவம் தெரிவித்ததாவது:-

"இ. த. ஆ. சங்கம் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களை 8 பகுதிகளாகப் பிரித்து இடமாற்றப்பட்டியலில் சமர்ப்பித்திருந்தோம்.

"[1] கலவரத்தின்போது குடும்ப உறுப்பினர் ஒருவரை இழந்தவர் அல்லது நெருங்கிய உறவினரை இழந்தவர் அல்லது குடும்ப அங்கத்தவர், நெருங்கிய நண்பர் உடன்வசித்தவர் கொலைசெய்யப்பட்டதை நேரில் பார்த்தவர் இவர்களின் மொத்தம் 34 பேர் உண்டு.

"[2] மிகவும் மோசமான முறையில் தாக்குதலுக்குள்ளான ஆசிரியர். அல்லது அவரது குடும்பத்தில் ஒருவர். இவர்களில் மொத்தம் 28 பேர்.

"[3] உடமை இழந்தவர்கள். சொந்த வீடு முற்றாக எரிக்கப்பட்டவர். வாடகை வீட்டில் இருந்து உடமைகள் எரிக்கப்பட்டவர்கள், கலவரத்தில் பெறுமதிவாய்ந்த பொருட்களைப் பறிகொடுத்தவர், பொருட்களை எடுக்காமல் சென்றவர்கள். இவர்களில் மொத்தம் 727 பேர்.

"[4] பாதுகாப்பான இடவசதியோ, உணவு வசதியோ இல்லாதவர்கள் மீண்டும் பழைய இடங்களுக்குச் சென்றும், பழைய இருப்பிடங்களைப் பெறமுடியாதவர்களும் இவர்களில் மொத்தம் 582 பேர்.

"[5] காடையர்களால் பயமுறுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டவர்கள், கலைக்கப்பட்டவர்கள் இவர்களில் மொத்தம் 116 பேர்.

"[6] ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு, ரிமாண்டில் வைக்கப்பட்ட ஆசிரியர்கள் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட ஆசிரியர்கள். ஆயுதப் படைகளினால் அழைத்துச் செல்லப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட ஆசிரியர்கள், நண்பர்கள் உடன் வசித்தவர்கள். விசாரணை செய்யப்பட்டதைக் கண்டவர்கள். இவர்களில் மொத்தம் 41 பேர்.

(7) விசேட காரணம் உள்ளவர்கள் பயம் அச்சம் காரணமாக பலத்த கஷ்டப்பட்டவர்கள் இவர்களில் மொத்தம் 5பேர்.

(8) கலவரத்தின் போது, அதன்பின் இறந்த ஆசிரியர்களுக்கு, மரண நன்கொடை, ஓய்வூதியம் பெறவேண்டும் இவர்களில் மொத்தம் 7 பேர்.

"பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களில் 1800 பேர் இடம் பெயர்ந்துவந்தனர். இவர்களில் சுமார் 250 பேர்வரை மீண்டும் பழைய இடங்களுக்கு சென்றுள்ளனர். 1533 பேருக்கு இடமாற்றம் வழங்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியிருந்தது ஆனால் 437 பேருக்கு மட்டுமே சிபார்சு வழங்கப்பட்டுள்ளது. இதனை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்"

உடப்புசாலவையில், வலப்பனை கிளை தலைவர் ஆசிரியர் சிவப்பிரகாசம், அடித்துமுறிக்கப்பட்டு மண்ணெண்ணை ஊற்றி கொளுத்தப்பட்டார். பொலிஸார் அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்து அங்கு மரணமானார். அந்த இடத்திற்குச் சென்று சேவைசெய்ய முடியுமா?

"நுவரேலியாவில் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த 14 பேர் உயிரோடு எரிக்கப்பட்டதை ஒரு ஆசிரியை நேரில் பார்த்திருக்கிறார். அவர் மீண்டும் அங்கே சென்றுவேலைபார்க்கமுடியுமா?

"ஆசிரியை ஒருவர் தங்கியிருந்த வீட்டில் நால்வர் கொலைப்பட்டிருக்கிறார்கள். அந்த இடத்திற்கு அவர்மீண்டும் செல்லமுடியுமா? மற்றொரு ஆசிரியை அதிர்ச்சியினால் மரணமடைந்துள்ளார்.

"கல்வி அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை இன்னும் இருக்கிறது. (க)

## "புதுக்குடியிருப்பு மக்களுக்கு வெள்ளநிவாரணம்வேண்டும்

### உதவி அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

"புதுக்குடியிருப்பு கிராம மக்கள் இன்று வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள். இவ்ஏழை மக்கள் வெள்ள நிவாரணத்தை எதிர்பார்த்துள்ளார்கள். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் நிவாரண உதவிகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்."

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திரு. செ. தெய்வீரசிங்கம் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## கடையிற்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடு என உறுதிப்பொருள்கள் நான்கு. இவற்றிற் கடைசியில் உள்ளது வீடு. கடை என்ற சொல்லுக்கு இறுதி, அந்தம் என்ற பொருளும் உண்டு. எனவே கடையாள் என்பதற்கு உறுதிப்பொருள் நான்கின் இறுதிக்கண்ணதாகிய மோட்சத்தைத் தருபவன் என விவேகிகள்பொருள்கொள்வர்.

சுவாமிகள் தென் இந்தியாவிலுள்ள பெங்களூரில் ஒரு நீதவானாக இருந்தவர்கள். ஒரு கொலைவழக்கில் குற்றவாளிக்குத் தூக்குத்தண்டனை விதிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது "இவனார், நானார்?" என்ற ஆன்மவிசாரணை எழுந்துவிட்டது. அவ்விசாரணையான "நானார்? என்னுள்ளமார்? ஞானங்களார்?" என்ற விசாரணையைக் கிளப்பிவிடவே அவர்கள் அந்நிலையிலிருந்து விலகி, மெய்யுணர்ந்து குருவருள்பெற்று சீவன் முத்தராய் திகழ்ந்தார்கள்.

திருக்கயிலாயத்திலிருந்து நேரேபுறப்பட்டுத் திருத்தில்லை சேர்ந்து அங்கு நடனமாடி அங்கிருந்து மண்டைதீவுக்கு வந்து தங்கிப்பின் வண்ணார் பண்ணையில் எழுந்தருளி அடியார்களை ஆட்கொண்டருளினார் இந்தப் பூமி [ஈழம்] சிவபூமி என்றார் திருமூலர். ஈழத்தில் குருபரம் பரைகளுக்கெல்லாம் மூலமுதல்வராகத் திகழ்பவர் கடையிற்சுவாமிகள்.

இக்கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும்போது நடந்த சிறுசம்பவமொன்றை குறிப்பிட விரும்புகிறேன். ஆலய தர்மகர்த்தா திரு. துரைராஜா அவர்கள் அருகாமையிலுள்ள என் வீட்டிற்கு வந்து "என்ன அதிசயம்! நெல்லிமரத்தடியில் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட லிங்கத்தின் ஆசன பீடத்தில் கடையிற்சுவாமிகள் அமர்ந்திருக்க மெய்மறந்த நிலையில் நான் தரிசனம் பெற்றேன். அதேயிடத்தில் இன்று சனீஸ்வரனுக்கு தனிக்கோவில் அமைக்கப்படுவதைக் கண்டதும் ஆச்சரியப்பட்டேன் என்றார்.

சனீஸ்வரனுக்கும், நடேசருக்கும், கடையிற்சுவாமிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக எனக்குப்படுகிறது. "இது சிதம்பரமடா!" என்று சுவாமிகள் திருவாய்மொழி மலர்ந்த இடத்தில் இன்று சிதம்பரப்பாணியில் கட்டப்பட்ட நடேசர் கோவில் உள்ளது. அழகான நடேசர் விக்கிரகம் காண்போர் கண்களை கவர்ந்திழுக்கும் நந்தி பலிபீடம் உள்ள திருக்கோவில் சமாதிக்கு அருகேயுள்ளது.

திருத்தில்லையிலிருந்து புறப்பட்ட கடையிற்சுவாமிகள் ஆடியோடி அமர்ந்த இடம் நீர்வாவியடி நடேசர் ஆலயத்திற்கு அருகே.

நவக்கிரகங்களுக்குள்ளே சனி பகவானை மட்டும் ஈஸ்வரன் என அழைப்பார்கள். சனீஸ்வரன் கருநிறப் பிரியர். கடையிற் சுவாமிகளும் கருநீலஉடை உடுத்தவர். சனிபகவான் முதலில் கஷ்டத்தைக் கொடுத்தாலும் இறுதியில் மோட்ச சாம்ராஜ்யத்தை அளிப்பவர். இவ்விதம் பலகோணங்களிலிருந்து ஒற்றுமைகளைக் கண்டுபிடிக்கலாம். அனுமார் வால் போல் நீண்டுவிடுமென அஞ்சி இத்துடன் முடிக்கிறேன்.

வாலிபர் ஒழுங்கு செய்துள்ள மகாசிவராத்திரியன்று பஜனை செய்யப்போகிறவரும் குப்பையில் மறைந்துகிடக்கும் குண்டுமணி- திரு எல். கே. சித்திரவேல் யோகசுவாமிகளின் நற்சிந்தனையிலிருந்தும் பாடல்கள் சிலவற்றைப் பாடுவார்.

கடையிற்சுவாமிகளைப் பற்றி நூல்கள் எழுதிய அறிஞர்களின் சொற்பொழிவுகளுக்கு ஒழுங்குகள் நடைபெறுகின்றன. மகாசிவராத்திரி நிகழ்ச்சிகள் சாயந்திரம் 5 மணியிலிருந்து ஆரம்பமாகும்.

## பூநகரி வழியாக

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### சமயதீட்சை அன்னதானம்

சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேஸ்வரம் திருவாசக மடத்தில் வழமைபோல் நடேசருக்கு விசேட அபிஷேகங்கள், பூசை, வழிபாடு ஆகியவையும் சமயதீட்சை அன்னதானமும் இடம் பெறவுள்ளது.

நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வருகின்ற அடியார்களுக்கு திருவாசக மடத்தில் தங்குமிடவசதிகள் செய்யப்பட்டுள்ளன. மகாசிவராத்திரியன்று இரவு பூசைகளும் சமய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

[யாழ்ப்பாணம்]

யாழ். சைவபரிபாலன சபை ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாளை புதன்கிழமை மகாசிவராத்திரிநடைபெறவுள்ளது.

இதனையொட்டி தேவார பாராயணம், சிவபூசை மகாநாடு, கந்தபுராணப் படிப்பு, பஞ்சாட்சரஅகண்டநாம ஜபம் தேவாரஇசை, நான்கு சாமமும் விசேடபூசைஆகியநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

[யாழ்ப்பாணம்]

அரியாலை நீர்ச்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளைபுதன்கிழமை இரவு சிவராத்திரி விழா அரியாலை இளைஞர் இந்து மாமன்றத்தினரால் நடத்தப்படவுள்ளது.

இதனையொட்டி கூட்டுப் பிரார்த்தனை, கதாப்பிரசங்கம், இசைக்கச்சேரிகள். சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன.

### நயினாதீவில்

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் மகாசிவராத்திரி விழா மிகச்சிறப்பாக நடைபெறஉள்ளது அன்று நான்கு சாமங்களிலும் அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனைகள் நடைபெறும்.

விசேட நிகழ்ச்சிகளாக காலஞ்சென்ற ஆத்ம ஜோதி ஆசிரியர் க. இராமச்சந்திராவின் கனிஷ்ட புதல்வியான தனலெட்சுமி. புவனேஸ்வரி ஆகியோரின் பக்திப்பாடல்கள் பாடசாலை மாணவ மாணவிகளது பஜனை, நாதஸ்வரவித்துவான் என். ஆர். கோவிந்தசாமியின் நாதசுரக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது. [ஜெ]

## இடமாற்றம் பெறுதவர் ராஜினமா செய்ய முடிவு!

(யாழ்ப்பாணம்)

"இடமாற்றப்பட்டியல் வெளியானதும் அதில் இடம் பெறாத பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களில் நூற்றுக்குமேற்பட்டோர் ராஜினாமாச் செய்யவும் ஒய்வுபெறவும் தயாராக இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம், தெரிவிக்கையில் எந்த ஒரு ஆசிரியரும் இடமாற்றம் பெறவில்லை என்ற காரணத்திற்காக ராஜினாமாச் செய்வதையோ ஓய்வு பெறுவதையோ சங்கம் ஏற்காது என்று தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்களின் முடிவைக் கல்வி அமைச்சரும் ஏற்றுக்கொள்ளமாட்டார். என்று தான் நம்புவதாகவும் அவர் சொன்னார்.

இடமாற்றம் பெறாத ஆசிரியர்கள் தொடர்ந்து வெற்றி காணும்வரை இடமாற்றம் பெற முயற்சி எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

"பொதுநிர்வாக அமைச்சசுற்று நிருபத்திற்கமைவாக, ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுவதைத்தாம் ஏற்க முடியாது. ஏனைய அரசாங்க ஊழியர்கள் நகரங்களில் கடமையாற்றுபவர்கள். ஆனால் தமிழ் ஆசிரியர்களின் பெரும்பான்மையானவர்கள் தென் பகுதியிலுள்ள கிராமப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்கள். இச்சுற்று நிருபம், ஏனைய அரச ஊழியருக்காகத் தயாரிக்கப்பட்டது. இதனைத் தமிழ் ஆசிரியரின் இடமாற்றத்திற்காகத் திணிக்கமுடியாது. ஆசிரியர் பிரச்னை ஏற்படும்போதெல்லாம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருடனேயே தொடர்புகொண்டது கல்வி அமைச்சரும் தன் எண்ணப்படி நடந்துகொண்டார் பொதுநிர்வாக அமைச்சு என்றும் தலையிடவில்லை. இடமாற்றப்பட்டியல் பெறாத பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் நிலைமைமாற்றிக் கூடி ஆலோசித்து முடிவுசெய்வோம்" என்றும் அவர் கூறினார்.

## யாருடையது

குருநகரைச் சேர்ந்த திரு. கே. அருள்நேசன் என்பவர் ஒரு பெரிய இரும்புத் திறப்பினைக் கண்டு எடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

உ

## முதலாண்டு நினைவஞ்சலி

கந்தையா சின்னத்துரை

(க. சி. துரை நகை வியாபாரம் 197, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 11-5-1910

மறைவு: 11-3-1983



ஆலமரமாம் நீ சாய்ந்து
ஆண்டொன்று அசைந்தாலும்-நின்
கோலநிழலின் குளிர்மை
மீண்டு வராதா என குமுறுகிறோம் ஐயா.

மனைவி, மக்கள், சகோதரி, மைத்துனர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சுற்றத்தினர்.

77, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம், 28-2-84. 1060

# சிமெந்து தாராளமாக கிடைக்கும்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து தொழிற்சாலையில் சிமெந்து விற்பனை நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது.

இத்தொழிற்சாலையின் அமைப்பு வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாகியிருந்த போதும், மின்சாரப் பற்றாக்குறை காரணமாக தொழிற்சாலை இயங்க முடியாமலிருந்தது.

தற்போது இலங்கை மின்சாரசபை மின்சாரம் வழங்க முன்வந்துள்ளமையால் இத்தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தது. நேற்று முதல் விற்பனை ஆரம்பமானது.

இத்தொழிற்சாலையில் நாளொன்றிற்கு 1 000 தொன் சிமெந்து உற்பத்தி செய்யப்படுவதுடன், நாளொன்றிற்கு 1,000 தொன் சிமெந்து விற்பனையும் இடம் பெறும்.

'பெர்மிட்' எதுவுமின்றி இங்கு சிமெந்து விநியோகம் செய்யப்படவிருப்பதால் போதியளவு சிமெந்தை பாவனையாளர்கள் பெறமுடியுமென்றும், சிமெந்திற்கு இனிமேல் தட்டுப்பாடு ஏற்படாதென்றும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

## சாட்டில் படை விலக்கல் உடன்பாடு

பாரிஸ், பெப். 27

சாட் நாட்டில் நிலைகொண்டிருக்கும் சகல வெளிநாட்டுத் துருப்புக்களும் திருப்பி அழைக்கப்பட்டு அங்கு நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமென்ற கருத்தில் பிரான்ஸும், லைஜீரியாவும் இணக்கம் கண்டிருக்கின்றன.

சாட்டில் பிரான்ஸ் தனது படையை நிறுத்திவைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

# 1984 மகளிர் குழு பயிற்சி திட்டம் அமுலாகும்!

(கரவெட்டி)

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபை 1984ம் ஆண்டுக்கான மகளிர் குழுப்பயிற்சித் திட்டத்தை அமுல் படுத்தவுள்ளது.

மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறி ஆங்கில டிப்ளோமா பயிற்சி, பாலர்பாடசாலை ஆசிரியை பயிற்சி என்பன அளிக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையின் யாழ். மாவட்ட செயலர் திரு க. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான விபரங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# கப்பல் விபத்தில் சில்லாலைவாசி பலி!

(பண்டத்தரிப்பு)

கிரேக்க நாட்டுக் கப்பல் ஒன்றில் மாலுமியாகக் கடமையாற்றும் சில்லாலையைச் சேர்ந்த செபஸ்தியன் சிங்கராயர் என்பவர் அக்கப்பலில் நிகழ்ந்த விபத்து ஒன்றில் சிக்கி உயிரிழந்தார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த 15 ஆண்டுகளுக்குமேலாக கிரேக்க நாட்டுக் கப்பலில் வேலை பார்த்து வந்தார் என்றும், கடந்த வாரம் இக்கப்பல் சூயஸ்கால்வாய்ப் பகுதியில் வந்துகொண்டிருந்தபோது நிகழ்ந்த விபத்தில் சிக்கி மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலத்தை சில்லாலைக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. [வெ]

# குடித்தார்; குழந்தையை முத்தமிட்டார்: மரணமானார்!

[மட்டுவில்]

மரணவீடு ஒன்றிற்கு பறையடிக்கச் சென்ற ஆறு பிள்ளைகளின் தந்தை திரும்பி வந்து, கிடைத்த கூலியை மனைவியிடம் கொடுத்தார். பின் திரும்பி அதை வாங்கி அக்காசிற்கு நன்றாய் குடித்தார். கடைக்குழந்தையைத் தூக்கி முத்தமிட்டார். ஓடிச்சென்று வீட்டினுள் சுருக்குப் போட்டு தொங்கி மரணமானார்.

இச் சம்பவம் கச்சாயில் நடைபெற்றுள்ளது. கச்சாயைச் சேர்ந்த சண்முகம் கணபதிப்பிள்ளை (45 வயது) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே மரணமானார். சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு என். தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மனைவி செல்லம்மா, மகன் தேவராஜா, அடுத்த வீட்டுக்காரர் சுவாமிநாதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்தவர் ஒரு மதுப்பிரியர் என்றும் சினமும் நன்றாகக் குடித்துவிட்டு வீடு திரும்பி மனைவி மக்களை அடிப்பார் என்றும், சம்பவதினம், இவர் ஒரு மரண வீட்டிற்குப் பறை அடிக்கச் சென்றார் என்றும், அங்கு கொடுத்த கூலி 50 ரூபாவுடன் வீடு திரும்பினார் என்றும், இப்பொழுது தாங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாக தேவமாதா தேவாலயத்தில் இருக்கிறோம் என்றும், வந்தவர் காசை மனைவியிடம் கொடுத்துவிட்டு, பின் அதை வாங்கிச்சென்று குடித்துவிட்டு வீடு திரும்பினார் என்றும், கடைப்பிள்ளையைத் தூக்கி முத்தமிட்டு விட்டு எமது பழைய வீட்டிற்குள் போனார் என்றும் போனவர் திரும்பாமையினால், போய்ப் பார்த்தபோது அவர் பிணமாகத் தொங்கினார் என்றும் சாட்சிகள் கூறினர்.

தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சனசமூக நிலையம்

(வேலணை)

வேலணை மேற்கு சைத்தணை வீதியில் ஐம்பதினாயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட ஸ்ரீமீனாட்சி அம்பாள் சனசமூக நிலையம் அண்மையில் திறக்கப்படவுள்ளது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இவ்வூர் இளைஞர்களும் பொதுமக்களும் நிதியுதவி வழங்கியுள்ளனர். கட்டடத்திற்கான காணியை சரவணை ஸ்ரீமீனாட்சி அம்பாள் தேவஸ்தானம் கொடுத்துள்ளது. சனசமூக நிலையத்தின் நிர்வாக உறுப்பினர்கள் வருமாறு:

காப்பாளர்: பண்டிதர் நா. மணிவாசகம்பிள்ளை, செயலாளர்: ப. அருளாரூரன், பொருளாளர்: ச. ஐ. தனபாலசிங்கம், கணக்காய்வாளர்கள்: சி. கணபதிப்பிள்ளை, மூ. திருஞானசம்பந்தபிள்ளை.

## கூரை பிரித்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

அக்கராயன்குளம் அரசினர் வைத்தியசாலை வைத்தியவிடுதியில் வைத்தியர் இல்லாத சமயம் பார்த்து கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் ரொக்கப்பணம் ரூபா பத்தாயிரத்தையும், வைத்தியரின் கைக்கடிகாரம் பேனைக் கடிகாரம், ரோச் ஆகிய பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதுபற்றி வைத்திய அதிகாரி கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிசார் சம்பவம் நடைபெற்ற இடங்களைப்பார்வையிட்டதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரைக்கைதுசெய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

ஒருவருடத்திற்கு முன்னர் வைத்தியசாலையின் வேலிக்கம்பிகளும், வாசற்கதவுகளும் களவாடப்பட்டு பொலிசார் விசாரணை செய்துவருவது குறிப்பிடத்தக்கது. (அரி-நிரு)

## பழைய புத்தகங்கள் தேக்கம்

(மானிப்பாய்)

கடந்த நான்கு ஆண்டுகளாக பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த பாடசாலைப் புத்தகங்கள் சகல பாடசாலைகளிலும் தேங்கிக்கிடக்கின்றன.

மாணவர்களிடமிருந்து வகுப்பேற்றங்களின்போது திருப்பப் பெற்ற புத்தகங்களே இவைகள்.

இவ்வித பழைய புத்தகங்களின் தேக்கங்களால் சில பாடசாலைகளில் வகுப்பு அறைகள் மாணவர்களால் பூரணமாக உபயோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை காரியாலயங்களும் இப்பழையப் புத்தகங்களால் நிறைந்து கிடக்கின்றன.

அதிபர்கள் இதுவிஷயமாக என்ன செய்வதென்று தெரியாத தடுமாற்ற நிலையிலிருக்கின்றார்கள். (வெ)

## கள்ளின் தரம் அறிய திடீர் பரிசோதனைக் குழு!

[கரவெட்டி]

வடபகுதியில் விற்கப்படும் கள்ளின் தரம், அளவு, அடர்த்தி என்பவற்றில் உள்ள குறைபாடுகள் பற்றி பரிசோதிப்பதற்கு திடீர் பரிசோதனைக்குழு ஒன்றை வடமாகாண தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுறவு ஆணையாளர் திரு. ச. வேலாயுதபிள்ளையின் ஆலோசனையின் பேரில் நிர்வகிக்கப்பட்டுள்ள திடீர் பரிசோதனைக்குழு அடுத்தமாதம் முதல் இயங்கும். சகல சங்கங்களினதும் அங்கத்தவர்களையும் அதில் பணியாற்றும் ஊழியர்களையும் பரிசோதனைசெய்யும் அதிகாரம் இதற்கு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு பரிசோதகர் ஒருவர், சங்கப் பிரதிநிதிகள் இருவர், சமாச ஊழியர் நிர்வாக சபை உறுப்பினர் இக்குழுவில் அங்கம் வகிப்பர்.

இச்சமாசத்திலுள்ள ஒவ்வொரு சமாசமும் தம்கட்டுப்பாட்டின்கீழுள்ள தவறணைகளின் அமைவிட வழி விபர வரைபடங்களை சமாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளன.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-30 'சிவராத்திரி' (விசேட சிங்கள நிகழ்ச்சி)
6-55 செய்திகள் (தமிழ்
7-15 'பொலுனு புர' — (பொலன்னறுவையில் தேசிய இளைஞர் சேவையினரின் நிகழ்ச்சிகள்
7-45 புரொஜெக்ட் யு எவ். ஓ
8-15 செய்திகள் சிங்களம்)
8-35 புரொஜெக்ட் தொடர்ச்சி
8-55 நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'சித்தசுவாதீனம்' — விவரணச்சித்திரம்
10-30 உலகச் செய்தித் தலைப்புகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு.

## அரச அதிபர்கள் இடமாற்றம்

(புலோலி)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. கே. ஞானச்சந்திரன் மன்னாருக்கும், மன்னார் அரசாங்க அதிபர் திரு. செந்தில்நாதன் முல்லைத்தீவிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## "சிறந்த கமலநலச் சேவை நிலையம்"

(காரைநகர்)

"யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று சிறந்த முறையில் முன்மாதிரியாக இயங்கிவரும் கமலநலச் சேவை நிலையம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள தொல்புரம் கமநலச் சேவை நிலையமேயாகும்"

இவ்வாறு தொல்புரம் கமநலச் சேவை நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு பேசிய வேலணை கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு குழந்தைவேலு தெரிவித்தார்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், கமநலச் சேவை ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் திரு. குழந்தைவேலு தொடர்ந்து பேசுகையில், "யாழ் மாவட்டத்தில் உள்ள கமநலச் சேவை நிலையங்களை இன்று பார்க்கும்போது தொல்புரம் கமநலச் சேவை நிலையத்தின் அமைந்துள்ளது போன்ற வாழைத்தோட்டங்கள் வாசலில் வரும் விவசாயிகளை வருக என வரவேற்புக்கொடுக்கும் காட்சி மனதைக் கவருகின்றது. இச்சேவை நிலையத்தில் உள்ள பயன்தருமரங்கள் கமநலச் சேவை நிலையத்தை அழகூட்டுவது மட்டுமல்லாமல் சிறந்த வருமானத்தையும் தருகின்றது. கடந்த காலங்களில் நட்டத்தில் இயங்கி வந்த இக்கமநலச் சேவை நிலையத்தை முன்னேற்றிய பெருமை இன்று அக்கமநலச் சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தருக்கும், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களுக்கும், கமநலச் சேவை ஊழியர்களுக்கும் அப்பகுதி விவசாயிகளுக்குமே உரியதாகும்" என்று கூறினார். (வெ)

## புதிய பாலர் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

வளலாய் கிராமத்தில் இலங்கை கிராமிய மீளாய்வு நிறுவனத்தின் மேற்பார்வையில் பிள்ளையார் பாலர் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு கந்தையாவும், நிறுவன இயக்குனர் செல்வி சுப்பையாவும் கலந்து கொண்டனர். இப்பாடசாலையின் ஆசிரியையாக செல்வி க. அருள்நாயகி நியமிக்கப்பட்டார்.

## சிறுவர் இல்ல கொடித்தினம்

(சாவகச்சேரி)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் ஒன்பதாவது கொடித்தினம் அடுத்தமாதம் 10ம் திகதி மேற்படி இல்லத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இல்லத் தலைவர் திரு கே. வி. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ள கொடித்தினக் கொண்டாட்டத்தின்போது வவுனியா மாவட்ட அரசாங்கஅதிபரும், மாவட்ட செயலாளருமான திரு. கே. சி லோகேஸ்வரனும், தொழிலதிபர் திரு க. கனகராசாவும் கொடிவிற்பனையை ஆரம்பித்துவைக்கவுள்ளார்கள்.

# ஆங்கிலத்தில் சுற்றறிக்கை வி.சே. அலுவலர் ஏற்க மறுப்பு

(சாவகச்சேரி)

பிரதமரின் பத்து லட்சம் வீட்டுத்திட்டம் தொடர்பாக யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளரால் சுற்றறிக்கை ஒன்று சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கடமையாற்றுகின்ற விசேட சேவை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தனி ஆங்கிலமொழியில் அச்சிடப்பட்டு, அனுப்பிவைக்கப்பட்ட இச்சுற்றறிக்கையினை சாவகச்சேரி பிரிவு விசேட சேவை அலுவலர்கள் ஏற்க மறுத்து தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குத் திருப்பி அனுப்பிவைத்துள்ளனர்.

யாழ் மாவட்ட முகாமையாளருக்கு இது தொடர்பாக அவர்கள் எழுதிய கடிதத்தில் "யாழ் மாவட்டத்தில் தமிழ் மொழியில் கருமமாற்றலாம் என்ற அரசின் அடிப்படைத் திட்டத்திற்கு எதிராக இச்செயல் நடைபெறுகின்றது எனவும், தமிழ் மொழியில் குறித்த சுற்றறிக்கை கிடைக்க உடன் ஒழுங்கு செய்யப்படவேண்டு எனவும் தெரிவித்துள்ளார்கள். (வெ)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
எம். ஜி. ஆர். - ராதாசலுஜா
இதயக்கனி
2 3 84 முதல்
BRUCE STRIKES BACK

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா
பால்குடம்

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30, 6-00
சிவாஜி - விஜயா
சத்திய சுந்தரம்

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00
கமல்— ஸ்ரீதேவி— இவர்
மீண்டும்கோகிலா
(ஈஸ்மன் கலர்)

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-30, 6-00
சசிகபூர்-மும்தாஸ்
நடித்த
சோர் மச்சாயே
சோர்
(ஹிந்தி)

சில தினங்கள் மட்டும்
ஹரன் (யாழ். நகர்)
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
வசந்தத்தில் ஓர்நாள்
ஈஸ்மன் கலர்)
விரைவில்
LADY CHATTERLEY'S
LOVER

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
9-30
கமலஹாசன்-மாதவி
சுவப்னா-தியாகராஜன்
பாரதிராஜாவின்
டிக் டிக் டிக்
(ஈஸ்மன்கலர்)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15,
4-45, 7-15, 9-30
Don Is Dead
From 29-2-84
AIRPORT 80

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-30
எம். ஜி. ஆர். -லதா-
வீரப்பா-நம்பியார்
பல்லாண்டு வாழ்க
ஈஸ்மன் கலர்/புதிய பிரதி

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-15, 4-45
7-00, 9-30
Roger Moore in
For Your
Eyes Only
Scope—Colour—Adults
LAST DAY 29-2-84
29-2-84 மகா சிவராத்திரி
தினம்
"உங்கள் கண்களுக்கு
மாத்திரம்"
நள்ளிரவுக் காட்சிகளும்
உண்டு
கடைசி தினம்: 29-2-84


பாடசாலை கிரிக்கெட் போட்டி முடிவுகள்:

# வீரர் அரியராஜா - 132
# வீரர் சுதாகரன் - 129

## இருவரும் ஆட்டமிழக்கவில்லை!

(விளையாட்டு நிருபர் 'தேவா')

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே கடந்தவாரம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில், கூடுதலான கல்லூரிகளின் கிரிக்கெட் கோஷ்டிகளின் தலைவர்கள் சிறப்பாக விளையாடியது பாராட்டத்தக்கதாகும்.

குறிப்பாக யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டியின் தலைவர் அரியராஜா, யாழ் மத்திய கல்லூரிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் ஆட்டமிழக்காமல் 132 ஓட்டங்களைப் பெற்றார் இதேபோட்டியில் யாழ். மத்திய கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டியின் தலைவர் சுதாகரனும் ஆட்டமிழக்காமல் 129 ஓட்டங்களைப் பெற்றார்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென், ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியிலும் சென் ஜோன்ஸ் கோஷ்டியின் தலைவர் பி திருக்குமார் தமது கோஷ்டி மிகவும் இக்கட்டான நிலையில் இருந்த போது, பொறுப்புடனும், பொறுமையுடனும் துடுப்பெடுத்தாடி 59 ஓட்டங்களைப் பெற்றார். இதே கோஷ்டியின் வீரர் வை. முரளீதரன் 14 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதே போட்டியில் ஹாட்லிக் கல்லூரியின் தலைவர் பி. நரேஸ்குமாரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 53 ஓட்டங்களைப் பெற்றார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ஆர். ரட்ணராசா யாழ். இந்துக் கல்லூரிக்கு எதிராக மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 67 ஓட்டங்களைப் பெற்றார். இதே போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் தவேந்திரனும் 65 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இக் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

### சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 7 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி மொத்தம் 118 ஓட்டங்களைப் பெற்றது. தலைவர் பி. நரேஸ்குமார் 53 ஓட்டங்களைப் பெற்றார். இக்கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 76 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சென். ஜோன்ஸ் பந்துவீச்சு வீரர் வை. முரளீதரன் சிறப்பாக பந்துவீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர்

சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 158 ஓட்டங்களைப் பெற்றது. தலைவர் பி திருக்குமார் 59 ஓட்டங்களைப் பெற்றார். இக்கோஷ்டி ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 14 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது 2-வது இன்னிங்ஸில் சென் ஜோன்ஸ் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 37 ஓட்டங்களைப் பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திருவாளர்கள் பி. டேவிற், எஸ் திருக்குமார் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

### வெற்றி-தோல்வி இல்லை

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டம் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது,

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி மொத்தம் 233 ஓட்டங்களைப் பெற்றது தலைவர் அரியராஜா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 132 ஓட்டங்களைப் பெற்றார்

யாழ், மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் நஷ்டத்துக்கு 198 ஓட்டங்களைப் பெற்றது. தலைவர் சுதாகரன் ஆட்டமிழக்காமல் 129 ஓட்டங்களைப் பெற்றார் இக்கோஷ்டி ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 14 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திருவாளர்கள் கே. ராமநாதன், எஸ். உமாகாந்தன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

### யாழ். இந்து 217 ஓட்டங்கள்

யாழ் இந்துக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

யாழ் இந்து முதல் இன்னிங்ஸில் மொத்தம் 217 ஓட்டங்களைப் பெற்றது வீரர் தவேந்திரன் 65 ஓட்டங்களைப் பெற்றார். யாழ்ப்பாணக் கல்லூரி தலைவர் பரமலிங்கம் 64 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்

யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 113 ஓட்டங்களைப் பெற்றமையால் மீண்டும் துடுப்பெடுத்தாடும் நிலைக்குள்ளானது யாழ் இந்து வீரர் டுரேஸ்குமார் 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். யாழ்ப்பாணக் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் ஆட்டம் முடிவடையும் போது 6 விக்கெட் நஷ்டத்துக்கு 146 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திருவாளர்கள் ஜெ எஸ். சத்தியநாதன், டி எம். வேதாபரணம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (வி)


இன்னும் சில தினங்கள் மட்டும்
றீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
சோகன்...
திருமதி பாக்கியராஜ்...
பயணங்கள்
முடிவதில்லை
- வண்ணம் -
Coming
SHAMMI KAPOOR
RAJSHREE...... IN
JANWAR
- Color -
Music - Shankar
Jaikishan


## தீர்த்தத் திருவிழா

[புலோலி]

பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தான தீர்த்தோற்சவம் அடுத்த மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ளது.

தீர்த்தோற்சவத்தினத்தன்று அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## மூளாயில் நூல்நிலையம்

[சுழிபுரம்]

"பொருளாதார ஆன்மீக வளர்ச்சிக்குக் கல்வியறிவு அவசியம். கல்வியறிவு நூல் நிலையங்களிலிருந்தே கிடைக்கின்றனவென்பதால் நூலகங்களில் நல்ல நூல்கள் வேண்டும்"

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மூளாய் இந்து இளைஞர் மன்ற நூல் நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இளைஞர்களது தீவிர முயற்சியால் நிதிசேகரிக்கத் தொடங்கி 27 நாட்களில் இந்நூல்நிலையம் அமைக்கப்பட்டது. இந்நூல் நிலையத் திறப்புவிழா திரு. க. அழகராசா தலைமையில் நடைபெற்றபோது சங்கானை உதவி அரசாங்க அதிபர் ஏ. சி செபநாயகம் மங்கள விளக்கேற்றினார் திருவாளர்கள்; இ. மயில்வாகனம், பாண்டுரங்கன் வல்லந்தசாமி, கு. குமாரவேலு, செ. சிவசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர். (கு)

## மனனப்போட்டி

[சுழிபுரம்]

திருமுருகாற்றுப்படை மனனப்போட்டியை நடாத்த விசவத்தனை முருகன் பிள்ளைத் தமிழ் நூல் வெளியீட்டுச் சபையினர் ஏற்பாடு செய்துள்ளனர்

போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் செயலாளர் விசவத்தனை முருகன் பிள்ளைத் தமிழ் நூல் வெளியீட்டுச் சபை, பண்ணாகம், சுழிபுரம் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 10-ந் திகதி முருகன் நிலைய மண்டபத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது. பரிசு பெறுபவர்களுக்குரிய பரிசளிப்பு வைபவம் விசவத்தனை முருகன் தீர்த்தத் திருவிழாவான அடுத்த மாதம் 17-ந் திகதி நடைபெறவுள்ளது.

## லூர்த்துமாதா உற்சவம்

[பண்டத்தரிப்பு]

மாதகல் கடற்கரையில் கோவில் கொண்டுள்ள அன்னை லூர்த்து மாதா ஆலய உற்சவம் நேற்று முன்தின ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

சுமார் ஒன்றேகால் இலட்ச ரூபா செலவில் உருவாக்கப்பட்ட புதியதேர் வாகனத்தில் மாதகல் புனித தோமையப்பர் ஆலயத்திலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு லூர்த்து மாதாவின் திருச்சொரூப பவனி மாதகல் கடற்கரையிலுள்ள "லெவி" ஆலயத்திற்கு புறப்பட்டுச் சென்றது.

பூசைகளை பங்குத்தந்தை அருட்திரு கே. சத்தியாப்பிள்ளை அடிகள் நிறைவேற்றினார்.

சில்லாலை, பண்டத்தரிப்பு, பெரியவிளான், இளவாலை ஆகிய அயற்கிராமங்களிலிருந்தும் பெருந்தொகையான கத்தோலிக்க மக்கள் இந்த உற்சவத்தில் கலந்து கொண்டனர். அன்னதானமும் இடம்பெற்றது. (செ)

## பாதிக்கப்பட்ட ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கத்தினர் நான்கு பாரிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட ஊழியர் சங்க உப-தலைவர் திரு. கே. ஆறுமுகம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களில் இதுவரை 50 பேர் பங்காளராகச் சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டங்களில் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் வேலை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார், (க)

## இன்றைய பலன்

ரசி மாதம் 16-ம் திகதி
(28—2—84)
செவ்வாய்க்கிழமை

மேடம்: தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். தாய்வழிப்பெருமை யுண்டு. வாகன நலனுடன் வாழ்விலும் சுகம் காணும்.

இடபம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள்பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு. பிள்ளையொன்றின் கல்வி முன் முன்னேற்றம் மகிழ்ச்சிதரும்.

மிதுனம்: சிறியவிடயம்கூட இன்று சிரமமாகத் தோன்றும் உன்வீட்டில் பூசல்கள் தலைதூக்கும். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் திருப்தியற்ற தினம்.

கடகம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம் பெறும், எதிர்ப்புகள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும் கண்ணியம் சேரும். கௌரவம் உயரும்.

சிங்கம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக அமைவார்கள் மொட்டைக் கடிதமொன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும் தொழில்துறையில் நஷ்டம் ஏற்படலாம்.

கன்னி: பரம்பொருளின் அருளுக்கு இடமுண்டு பரோபகார சிந்தை தலைதூக்கும் பொதுப்பணிகளில் ஈடுபடுவர்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர் அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

துலாம்: திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள் திறமையான நடவடிக்கைகளின் மூலம் பணவரவைத் தேடிக்கொள்வீர்கள்.

விருச்சிகம்: புதுமையான சம்பவங்கள் நடைபெறும் சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர்கள் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

தனுசு: பணம் பறிபோவதற்கும் இடம் ஏற்படலாம் முகமன்பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கை உடன் இருக்கவும். அதிகபித்தளைக்கு இடம் அவியாத வாய்வுப்பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

மகரம்: தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும் கடமையாற்றும் இடத்தில் நிதானம் வேண்டும்.

கும்பம்: புதுவழிகள் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

மீனம்: வெற்றி உமது அருகில் விரைந்துவரும் எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள் கனிவான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
வேலுப்பிள்ளை ரவீந்திரன்

### வேலணை வங்கிக் கொள்ளை:

# யாழ். பொலிஸ் நிலையத்தில் லொறி, வான், இரும்புபெட்டி

(யாழ்ப்பாணம்)

தச்சன்தோப்பில் பலத்த துப்பாக்கிச் சமருக்குப் பின் பொலிஸாரினால் மீட்கப்பட்ட லொறி யாழ் பொலிஸ்நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. லொறியின் பின் பகுதியில் வேலணை இலங்கை வங்கியின் ஒரு இரும்புப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

லொறிக்குப் பக்கத்தில், வேலணை வங்கிக்கொள்ளையின் போது பணையில் கைப்பற்றப்பட்ட இரு மினிவானும் நிறுத்தப்பட்டுள்ளன. ஒரு வானுக்குள் பெரிய இரும்புப் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. மற்ற வானுக்குள் "காஸ் சிலிண்டர்"கள் வைக்கப்பட்டுள்ளன. (க)

## மட்டுநகர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இல்லையேல் குறித்த டாக்டரிம் மன்னிப்புக்கேட்க வேண்டும் என்றும் கோரினார்கள்.

நேற்று மாலைவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததைத்தொடர்ந்து டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனி முத்து நேரில் சென்று நிலைமையை அவதானித்ததுடன் அங்கு விசேட ஆலோசனைக் கூட்டம் ஒன்றினை நடத்தினார். நேற்றிரவு நீண்டநேரமாக கூட்டம் நடைபெற்றது. (கு)

## குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

விளக்கிற்கு மண்ணெண்ணை என்று நினைத்து பெற்றோலை தாயார் ஊற்றியபோது ஏற்பட்ட தீவிபத்தினால் ஒன்றரை வயதுக் குழந்தை பலியானது!

முள்ளியானைச் சேர்ந்த ஒன்றரை வயதான வி. ஸ்ரீதரனே பலியான குழந்தையாகும்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ், மரணவிசாரணை நடத்தினார்.

இத் தீவிபத்தில் காயமடைந்த தாயார், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துமரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## இப்படியும் நடக்கிறது

கொழும்பிலிருந்து 'அவர்கள்' ஒருவரனில் வருவார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கம்பனிகளின் பெயரைக் கூறி, அந்தக் கம்பெனிகள் தமிகளது உபஏஜண்டுகள் என்று சொல்லிக் கிராமப்புறங்களில் 'பிஸ்னஸ்' செய்வார்கள்.

'அவர்கள்' எதிர்பார்த்த 'பிஸ்னஸ்' 'ஒகோ' என்று நடந்துவிட்டால், அவர்கள் கொடுக்கும் பற்றுச்சீட்டில்; அடுத்தமுறை வரும்போது ஒரு வானொலிப் பெட்டி, ஒரு 'ஷோகேஸ்' ஆகியவை இலவசமாக வழங்கப்படும்'' என்று குறிப்பிடுவார்கள்.

முதல் மர்மம்! பற்றுச்சீட்டில் காணப்படும் பெயரில் கொழும்பில் மருந்துக்கம்பெனி எதுவும் இருக்காது.

இரண்டாவது மர்மம்! 'அவர்கள்' வழங்கும் மருந்துகளின் உண்மையான விலை, 'கானே' விலையாகும்.

மூன்றாவது மர்மம்: இந்த மருந்துகள் காலவதியானவை. அதாவது மருந்து பாவிப்பதற்குரிய குறிப்பிட்ட காலப் பகுதியைக் கடந்தவையாகும்! மேலும் 'அவர்கள்' குறிப்பிடும் இலவச அன்பளிப்புகளும் வெறும் கண்துடைப்புதான்.

மக்களை நஞ்சூட்டும் இந்த மோசடி வியாபாரத்துக்கு இருவாரங்களுக்கு முன்னர் வேலணை வர்த்தக நிறுவனமொன்று 'பலி'யாகியுள்ளது.

"ஊடுருவி"

## இரண்டு ப நோ. கூ.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புப்பெட்டியை திறந்து கொள்ளையிட்டனர்.

சங்கத்தின் பெண் காசாளரிடமும், ஆண் காசாளரிடமும் அவர்களின், வீடுகளுக்குச் சென்று பயமுறுத்தி இரும்புப் பெட்டித்திறப்பை பெற்றுள்ளனர் என்றும் புகார்செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் காவலர்களும் துப்பாக்கிமுனையில் கொள்ளையர்களால் விரட்டப்பட்டிருந்தனர்.

பருத்தித்துறைப்பொலிஸார் இக்கொள்ளை சம்பந்தமாக தீவிர புலன் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

### உடுப்பிட்டியில்

நேற்றுக் காலை உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தினுள் நுழைந்த நான்கு துப்பாக்கி இளைஞர்கள் அங்கு பொதுமுகாமையாளரையும் ஏனையோரையும் ரிவோல்வரைக் காட்டி மிரட்டி இரும்புப்பெட்டியிலும், கணக்காளர் லாச்சியிலும் வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்து இருபத்திஐயாயிரத்து முன்னூற்று அறுபத்தி இரண்டு ரூபாய் நாற்பத்தி மூன்று சதத்தை கொள்ளையடித்துச் சென்றனர்.

இருவர் வெளியில் காவலுக்கு நின்றபோது அலுவலக உட்புறம் மற்றைய இருவர் இந்த கொள்ளை நாடகத்தை நடத்தினர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் அசோகன் சந்திரசாகர தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் விசாரணைகளை மேற்கொள்ளுகின்றனர். (கு)

# ★ உதவியாளர் இல்லாததன் எதிரொலி

# இரு வயோதிபர் தவறி விழுந்து மரணம்!

## கைதடியில் மற்றுமொரு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வயோதிபர் விடுதியில் இருவயோதிபர்கள் தவறி விழுந்ததைத் தொடர்ந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்கள்.

யாழ். பிறவுண் வீதியைச் சேர்ந்த தம்பையா தெய்வானைப்பிள்ளை [83 வயது] 71-ம் ஆண்டு முதல் வயோதியர் விடுதியில் இருந்துவருகிறார். பொன்னர் மாணிக்கம் [79 வயது] கடந்த 8 வருடமாக வயோதிபர் விடுதியில் இருந்துவருகினார். இவர்கள் இருவரும், தவறிவிழுந்து, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்கள்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி எஸ். எம். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

கைதடி வயோதிபர் விடுதியில் சுமார் 70 வயோதிபர்கள், இருப்பதாகவும், அவர்களுக்கு உதவிக்காக ஒருவர் மட்டுமே இருப்பதாகவும், பதிவுபெற்ற ஒரு டாக்டர் மட்டுமே இருப்பதாகவும், விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

வயோதிபர்களினுள் சிலர், நடக்கமுடியாத நிலையில் இருப்பதாகவும், பாதிப்பேருக்கு இரவில் கண்தெரியாதென்றும் சிலருக்கு பகலிலேயே கண் பார்வை குறைவென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. ஒரே ஒரு உதவியாளர்மட்டும், 70 வயோதிபர்களையும், பார்ப்பது கஷ்டமென்றும் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி வயோதிபத்தினால் ஏற்பட்ட இயற்கைமரணம் எனத்தீர்ப்பளித்து 70 பேரை ஒரு உதவியாளரினால் பார்ப்பது முடியாதகாரியமென்றும் இதற்கு முன்னரும் ஒரு வயோதிபர் தவறிவிழுந்து மரணமடைந்துள்ளதாகவும், மேலதிகாரிகள் இதில் உடன் கவனம் செலுத்தவேண்டும் என்றும் மரணவிசாரணை அதிகாரி தெரிவித்தார். [க]

## பனைத்தொழில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

பனைத்தொழில் சரித்திரத்தில் இது ஒரு புதிய கண்டுபிடிப்பாக உள்ளதென்றும் இலங்கைக்கே இந்தப்பெருமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பதநீர் உற்பத்தியையும் விற்பனையையும் விஸ்தரிக்க இலங்கையின் பனை அபிவிருத்திச்சபை எடுத்துவரும் நடவடிக்கைக்கு இந்த கண்டுபிடிப்பு ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று கூறிய திரு. சம்பந்தன், "விசேட கருவிகள் எதுவுமின்றி சாதாரணமாக இந்த முறை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சுமார் இருபது நாட்களுக்கு போத்தலில் அடைத்து வைத்த பதநீர் பாவிக்கக்கூடியவகையில் இந்த ஆய்வு வெற்றிகண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பதநீரை போத்தலில் பக்குவப்படுத்த முடியாது பழுதடைந்துவிடும் என்ற பேச்சுக்கே இடமில்லாதவாறு இந்த ஆராய்ச்சி பூரண வெற்றியைக் கொடுத்துள்ளதாகவும் கூட்டுறவு ஆணையாளர் உட்பட பலர் இதை பார்வையிட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். (வன்-நிரு)

## சமூக விரோதி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி நபர் பலாத்காரம், கொள்ளை, களவு போன்ற செயல்களில் ஈடுபட்டார் என்றும் படுமோசமான சமூகவிரோத குற்றச்செயல்களில் தொடர்ந்து ஈடுபடும் சமூகவிரோதிகளுக்கும் மரணதண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது!

## துப்பாக்கிமுனையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினமிரவு நான்கு இளைஞர்கள் அவ்விடத்தில் வந்த லொறியொன்றை மறித்து கடத்திச்சென்றதாகக் கூறப்படுகிறது

சாரதியை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி இறக்கிவிட்டு லொறியைக்கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் இச்சம்வம்பற்றி விசாரணை செய்து வருகின்றனர். (க)

## க. பொ. த....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று வெளியாகின.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கு அதிபர்கள் மூலமாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அதிபர்கள் மூலமாகவும் நேற்று பெறுபேறுகள் அனுப்பப்பட்டன.

யாழ் மாவட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்று தபால் சேர்க்கப்பட்டபோதிலும் இன்று காலை யாழ். தேவியில் எடுத்துச்செல்லப்பட்டு நாளையே விநியோகம் செய்யப்படும் என தெரிகிறது. [கு]

## 24 வங்கிகள் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுத்தவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலணையிலுள்ள கிளை, யாழ். ஸ்டான்லி வீதிக்கிளைக்கும், பருத்தித்துறை கிளைக்கும், பளைகிளை சாவகச்சேரி கிளைக்கும் மாற்றப்பட்டன.

மட்டக்களப்புமண்டபத்தடி கிளை, மட்டக்களப்பு கிளைக்கும், அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை கிளை, கல்முனை கிளைக்கும், தம்புலுவில் கிளை, அக்கரைப்பற்றுக் கிளைக்கும், உகன கிளை அம்பாறைகிளைக்கும், பொத்துவில் கிளை அக்கரைப்பற்றுக்கிளைக்கும் மாற்றப்பட்டுள்ளது.

திருமலைமாவட்டத்தில் கிண்ணியா கிளை, சீனன்குடாக் கிளையுடனும், பன்குளம்கிளை, திருமலை மாவட்ட அலுவலகத்துடனும், தம்பலகாமம் கிளை, திருமலை மாவட்ட அலுவலகத்துடனும், நிலாவெளிகிளை, மாவட்டஅலுவலகத்துடனும், இச்சவெளி கிளை, மாவட்ட அலுவலகத்துடனும், புல்மோட்டைகிளை மாவட்ட அலுவலகத்துடனும், கிளிவெட்டி கிளை, மூதூர் கிளையுடனும் இணைக்கப்பட்டன.

7 மக்கள் வங்கிக்கிளைகள் மூடப்பட்டு பல்வேறுகிளைகளுடன் நேற்று இணைக்கப்பட்டன.

## குருநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் பொருட்கள் கொண்ட பொலிதீன் பை ஒன்றையும் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. (கு)

## புதுக்குடியிருப்பு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மகஜரில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"வெள்ளப் பெருக்கினால் புதுக்குடியிருப்பு மக்களின் மாடு, ஆடு, கோழி போன்ற கால்நடைகள் அதிகளவில் இறந்துவிட்டன. இதனால் இம்மக்களின் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது அன்றாடம் கூலி வேலை செய்யும் ஏழை மக்களும் இவ்வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வும் இவர்களைப் பாதித்துள்ளது

"வெள்ளப் பெருக்கினால் நெல் மற்றும் உணவுப் பயிர்கள் பெருமளவில் அழிந்துவிட்டன. இதனால் நகைகளை அடகுவைத்து விவசாயம் செய்து வந்த ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

"இவர்கள் குடியிருந்த வீடு, வாசல்களும் வெள்ளப்பெருக்கினால் இடிந்து தரைமட்டமாகியுள்ளன" என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (வெ)

## மரண அறிவித்தல்

### வேலாயுதர் கந்தையா

மட்டுவில் தெற்கு வரணையடியைச் சேர்ந்த வேலாயுதர் கந்தையா காலமானார். இவர் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக்கணவரும், வேலுப்பிள்ளை (சொக்குவில்), பொன்னையா, தம்பையா, அன்னமுத்து, சரவணமுத்து (கச்சேரி கிளிநொச்சி), இளையதம்பி (அதிபர் நொச்சிக்குளம் அ. த. க, பாடசாலை, கிராமோதயசபைத் தலைவர் மட்டுவில் நுணாவில்) ஆகியோரின் தகப்பனும், தம்பிமுத்து, மாணிக்கம், பரமேஸ்வரி, சிவபாக்கியம், மின்னல்கொடி (ஆசிரியை கைதடி நுணாவில் த. க. பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை 28-2-84 (இன்று) பி. ப. 1 மணியளவில் குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

1064   தகவல்: இளையதம்பி.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... யாழ்ப்பாணம், ... 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, ... No: B 100236/81, Kolamado- P. O.Box: 49, Telephone: 22389 — 24126.